சென்னை-6.

6715

## சுருக்கம்

பள்ளிக் கல்வி – இலவச பாடப்புத்தகம் வழங்கும் திட்டம் – தமிழக அரசின் அனுமதி பெற்று மாநில அரசின் பாடத்திட்டத்தில் தமிழ் வழியில் கற்பிக்கும் அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் பாடநூல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (க்யூ2) துறை

அரசாணை (நிலை) எண்.104 நாள்: 03.7.2006

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.37, பள்ளிக் கல்வித் துறை நாள் 28.3.2005.
2. அரசாணை (நிலை) எண்.94, பள்ளிக் கல்வித் துறை நாள் 24.5.2005.

----

ஆணை:–

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் தங்கள் கல்வியை இடையிலேயே நிறுத்திவிடாமல் தொடர்ந்து பயில ஊக்கம் அளிக்கும் திட்டமாக அவர்களுக்கு 10 ஆம் வகுப்புவரை இலவசமாகப் பாடநூல்கள் அனைத்தும் வழங்குவதற்கு அரசால் ஆணையிடப்பட்டது

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்படி திட்டம் விரிவுபடுத்தப்பட்டு தமிழகத்தில் உள்ள அரசுப்பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் வகுப்புகள் ஆகியவற்றில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் +2 எனப்படும் 12 ஆம் வகுப்பு வரை பாடநூல்கள் அனைத்தும், இலவசமாக வழங்குவதற்கு அரசால் ஆணையிடப்பட்டது.

3. 1991 ஆம் ஆண்டிற்குப் பிறகு தொடங்கப்பட்ட / தரம் உயர்த்தப்பட்ட மாநிலப் பாடத்திட்டத்தை நடத்தும் தமிழ்வழி பள்ளிகள் / வகுப்புகள் தற்போது இயங்கி வருகின்றன. அரசின் கொள்கை முடிவிற்கேற்ப, இவ்வகைப் பள்ளிகளில் / வகுப்புகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு மேற்படி இலவச பாடநூல் வழங்கும் திட்டம் நீட்டிக்கப்படவில்லை எனவும், மேற்படி திட்டத்தை இவர்களுக்கும் நீட்டிக்குமாறு அரசுக்கு கோரிக்கைகள் வரப்பெற்றன.

4. இக்கோரிக்கையை ஆய்வு செய்து அரசு, தமிழக அரசின் அனுமதி பெற்று, மாநில அரசின் பாடத்திட்டத்தில் தமிழ் வழியில் கற்பிக்கும், அரசு மானியம் பெறாத பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் இலவச பாடப்புத்தகம் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்தி அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்தை நடப்பாண்டு முதலே, அதாவது, 2006–07 ஆம் கல்வியாண்டிலிருந்தே நடைமுறைப்படுத்த அரசு ஆணையிடுகிறது.

5. இதற்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புக்களில் பற்று வைக்கப்படல் வேண்டும்:–

தொடக்கப்பள்ளி இயக்ககத்திற்கான கணக்குத் தலைப்பு

2202–பொதுக்கல்வி–01–தொடக்கக் கல்வி–108 பாடப்புத்தகங்கள்–பத்தாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள்–II.மாநிலத் திட்டம் JC மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்குதல் – 68. புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிற்காகும் செலவு (தகுதொகு.2202–01–108–JC–6808)

பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கான கணக்குத் தலைப்பு :

2202–பொதுக்கல்வி–02–இடைநிலைக்கல்வி – 106 – பாடப்புத்தகங்கள் – பத்தாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள்– II. மாநிலத்திட்டம் – JC – மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் வழங்குதல்–68 . புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், சிலேட்டுக்கள் முதலியவற்றிற்காகும் செலவு. (ததொகு.2202–02–106–JC–6801).

6. இச்செலவினம் புதுப்பணித்திட்டமாகக் கருதப்படும். இச்செலவினத்திற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினத்திற்கு எதிர்பாராச் செலவு நிதியில் இருந்து முன்பணம் அனுமதிக்கப்படும். இதற்கான ஆணைகள் நிதித் (வ.செ.தி.பொ.I) துறையில் பிறப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவையான முன்பணம் பெறுவதற்கு நிதித் (வ.செ.தி.பொ.I) துறைக்குத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் அனுப்பி வைக்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் பற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண் 2409/FS/P/2006 நாள் 03.7.2006–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.219.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர்,சென்னை.6
தொடக்கக் கல்வி இயக்குநர்,சென்னை.6
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் கழகம்,சென்னை.6
மாநில கணக்காய்வு தலைவர், சென்னை–18
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35

நகல்
நிதித்துறை (கல்வி.II)/(வ.செ.தி.பொ.II) சென்னை–9
அனைத்துத் துறை தலைவர்கள்
அனைத்து தலைமைச் செயலகத்துறைகள், சென்னை – 9
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறைஅமைச்சர் அலுவலகம்,சென்னை.9
இருப்புக்கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.